Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி -16 | 01-07-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 133




### புலிகள் மீது அழுத்தம் தேவையற்றது

# தீர்வை முன்வைக்க வேண்டியவர்கள் மீதே அழுத்தம் பிரயோகிப்பது பொருத்தமானது!

### ஜப்பான் தூதுவரிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

**விடுதலைப்புலிகள் முன்வைப்பது தமிழ் மக்களுடைய அபிலாசைகளும் தமிழ் மக்களுடைய எதிர்காலம் குறித்த விடயங்களுமாகும். ஆகவே அதில் சர்வதேச சமூகம் அழுத்தங்களைப் பிரயோ கிக்கவேண்டிய தேவையில்லை. அதைமறுத்து ஆக்கிரமித்து நிற்கின்றவர்கள் அல்லது அதற்குத் தீர்வை முன்வைக்க வேண்டியவர்கள் பக்கம் அழுத்தம் பிரயோகிக்கவேண்டியது பொருத்தமானதாக இருக்கும் . இவ்வாறு நேற்று தம்மைச் சந்தித்துப் பேசிய ஜப்பானியத் தூதுவரிடம் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

இச்சந்திப்புத் தொடர்பாக நேற்றுச் செய்தியாளர்களுக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் மேலும் தெரிவிக்கையில்;

இச் சந்திப்பில் முக்கியமாகத் தற்போதுள்ள சூழ்நிலை சம்பந்தமாகவும் ஜப்பான் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாகவும் விடுதலைப்புலிகளுடைய நிலைப்பாடு சம்பந்தமாகவும் கூடுதலாகக் கேட்டறிந்துள்ளனர்.

கேள்வி: பேச்சுவார்த்தை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட நிலையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றிருக்கின்றது. பேச்சுக்கள் தொடரக் கூடிய வாய்ப்பு உள்ளதா?

(08ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்ட ஜப்பானியக்குழு

## ஜப்பானியத் தூதுவர் தமிழ்ச்செல்வன் ஒன்றரைமணி நேரச் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சிசிரோ ஒட்சுகாஅவர்கள் தலைமையிலான குழுவினர் நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் பகல் 12.00 மணிதொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளருடன், விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன், அரசியல்துறையைச் சேர்ந்த ஜோர்ச், அலெக்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக, சிறிலங்கா உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி

(08ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் செல்வது இந்தியாவால் சகிக்க முடியாத ஒன்று

### ரெலோ முதல்வர் சிறிகாந்தா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளை ஓரம் கட்டுவதை இலக்காகக் கொண்டு செயற்படும் இந்தியாவால் அதிகார பலம் பொருந்திய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பொன்று விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவதைச் சகித்துக் கொள்ள முடியாது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் முதல்வர் சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று இவ்வியக்கத்தின் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இதனைச் தெரிவித்தார். இந்திய அரசு புலிகள் பலம் பெறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. அவர்களை ஓரம் கட்டுவதை நோக்காகக் கொண்டு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. இத்தகைய சதித்திட்டங்களுக்கு இடம் கொடாது இந்திய அரசின் இத்தகைய சதிவேலைகளை அம்பலப்படுத்தும் வகையில் தமிழீழத் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட வேண்டும். எமக்கு நிம்மதியைத் தரக்கூடிய இடைக்கால நிர்வாகக்கட்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர சோதனைச் சாவடிகள் இல்லை திடீர் சோதனைகள் தொடரும்

### சிறிலங்கா உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பில் நிரந்தரமாகச் சோதனைச் சாவடிகள் அமைக்கும் திட்டம் எதுவும் கிடையாது என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிக்கின்றார். எனினும் மக்களின் பாதுகாப்புக்கருதி விசேட பாதுகாப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் என அவர் மேலும் கூறினார். யுத்த நிறுத்தத்தின் முன்பு இருந்த சோதனைச் சாவடிகள் மீண்டும் அமைக்கப்படும் என்றும் சிறுபான்மையினர் அனாவசியமாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. திடீர் சோதனை நிலைகளும், இடத் துக்கிடம் செல்லும் ரோந்து நடவடிக்கைகளும் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## நோர்வே முன்னாள் தூதுவர் நாளை வன்னிக்கு விஜயம்?

முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் நாளை வன்னிக்கு வருகை தரவுள்ளதாக கொழும்பு இணையத் தளமொன்று தெரிவிக்கிறது.

அவர் வன்னிக்கு வருகை தந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்து விடுதலைப்புலிகளுடன் பேசவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மீண்டும் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டமைக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் கண்டனம்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மீண்டும் வீதித்தடைகளை அமுல்படுத்தி மக்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்துவதை தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு கண்டித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் பா.உ. தெரிவிக்கையில், விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் நல்ல நிலையிலேயே செயற்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் போக்குவரத்துத் தடை வீதித்தடைகள் குறித்த விடயங்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் வடகிழக்கு மாகாணத்திற்கு மட்டும் அல்ல, முழு நாட்டிற்கும் அது செல்லுபடியாகும். இந்த நிலையில் தற்போதைய அரசின் செயலை இதற்கு விரோதமான செயலாகவே நாங்கள் கருதுகிறோம்.

அரசு சிறிய பிரச்சினைகளுக்கு இப்படிப்பட்ட தீர்மானங்களைக் கொண்டு வருவதால் பொதுமக்களே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். வீதிச்சோதனை வடிவில் மீண்டும் எமது மக்கள் இன்னல்களுக்கு உட்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை.

புலனாய்வுத்துறையினர் கொலை செய்யப்படுவதற்கு வீதித்தடைகளைப் போட்டு மக்களை மீண்டும் துன்புறுத்துவது பரிகாரம் அல்ல, அதற்காக அமுல்படுத்தியுள்ள சட்டங்களை நிறைவேற்றுங்கள். இவற்றிற்காக தமிழர்களை துன்புறுத்துவதை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் எனக் கூறியுள்ளார்.

## ஜப்பான் விசேட தூதுவர் லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திப்பார்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பான ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாசி விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களை சந்தித்துப் பேச உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியல் ஆலோசகரை விசேட தூதுவர் லண்டன் சென்று சந்திக்க இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சிறீலங்காவின் சமாதானக் குழுவில் சட்டமா அதிபர் இணைப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் சட்டமா அதிபர் சி.கமலசபேசன் அரசாங்கத்தின் சமாதானக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளார். சமாதான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள போதும், இடைக்கால நிர்வாக சபை தொடர்பான சட்டவரைபுகளைத் தயாரிப்பதில் சட்டமா அதிபர் கமலசபேசன் ஈடுபட்டுள்ளதையடுத்தே இந்தக் குழுவில் இணைக்கப்பட்டுள்ளதாகத், தெரிவிக்கப்படுகிறது.

# தீர்வை முன்வைக்க வேண்டிய...

இன்றைய சந்திப்பில் நாங்கள் எங்களுடைய தலைமைப்பீடத்தினுடைய நிலைப் பாடுகளை அவர்களுக்குத் தெளிவாக விளக்கியிருந்தோம். முக்கியமாக ஜப்பானில் நடைபெற்ற மாநாடும் மாநாட்டினுடைய தீர்மானங்களும் தமிழ் மக்களுடைய அவசர மனிதாபிமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுவதற்கான பரிந்துரைகளை, பரிந்துரைப்பது அல்லது தீர்மானங்களை எடுக்கவில்லை என்ற குறைபாட்டை அவர்களுக்கு சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

எதிர்காலத்தில் இந்த சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடருவதாயின் எமது மக்களினுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடியளவு தீர்க்கமான முடிவுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். முக்கியமாக கடந்த காலங்களில் இந்தச் சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்ட பின்னடைவுகள் மக்களுடைய நம்பிக்கையீனங்களையும் யதார்த்தமாகக் கொண்டு எதிர்காலத்தில் முன்னேற்றகரமாக நாங்கள் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமாக இருந்தால் எமது மக்களுடைய அவசர அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு வலுவான அதிகாரமுள்ள ஒரு கட்டமைப்பை நிறுவ வேண்டிய அவசியத்தை நாங்கள் அவர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியான ஒரு நிலைப்பாட்டை அரசாங்கம் தீர்க்கமாக எடுக்கின்றபொழுது மீண்டும் பேச்சுக்களைத் தொடரக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகும் என்பதை தெளிவுபடுத்தியிருக்கின்றது.

**இன்றைய சந்திப்பில் இது தொடர்பான விடயங்களுக்கு ஏதாவது சாதகமான சூழ் நிலை ஏற்பட்டுள்ளதா?**

இன்று ஜப்பான் தூதுவரைப் பொறுத்தவரையில் அவர்கள் தங்களுடைய எதிர்பார்ப்புக்களையும் சர்வதேச சமூகத்தினுடைய எதிர்பார்ப்புக்களையும் சுட்டிக்காட்டினார்கள். முடிவுகள் என்ற பொழுது அரசாங்கத்தினுடைய பக்கம் தான் முடிவுகள் இருக்கின்றது. ஆனால் எங்களுடைய முடிவுகளை நாங்கள் தெளிவாக்கியுள்ளோம். அதை அவர்களும் புரிந்திருக்கின்றார்கள். தென்னிலங்கையில் இருக்கின்ற அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் குறிப்பாக சனாதிபதிக்கும் இன்றைய சிறிலங்காப் பிரதமர் ரணில் தலைமையில் உள்ள அரசாங்கத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் இது எமது சமாதான முன்னெடுப்புகளைப் பாதிக்காத வகையில் அவர்கள் ஒன்றிணைந்து தீர்க்கமான முடிவுகளை எடுத்து எமது மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தீர்மானமுடிவுகளை எடுத்து முன்னேற்றகரமாக சமாதான முன்னெடுப்புகளைக் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்கு அரசாங்கத்தின் பக்கமும், தென்னிலங்கையில் உள்ள ஏனைய சக்திகளின் பக்கமும் அழுத்தங்களையும் பிரயோகிக்க வேண்டும் என்றே கூறுகின்றோம்.

இந்தச் சமாதான முயற்சிகள் தொடர வேண்டும் என்று கூறி சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகள் அமைப்பை வலியுறுத்தியிருக்கின்றது. இது போன்று அரசிற்கு கொடுக்கப்படவில்லை போன்ற ஒரு நிலைப்பாடு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இது தொடர்பாக இப்படியான ஒரு கருத்து நிலைப்பாட்டை அவர்களுக்குத் தெளிவாக விளக்கியிருந்தோம். இன்று நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் மிக முக்கியமான விடயமாக இதை எடுத்து விளக்கியிருந்தோம். விடுதலைப்புலிகள் பக்கத்தில் நீங்கள் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டிய தேவையில்லை. தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தமிழ் மக்களுடைய அபிலாசைகளைத் தான் விடுதலைப்புலிகள் முன்வைக்கின்றார்கள். அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட தரப்பு என்ற ரீதியில் தமிழ் மக்கள் தான் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள். பாதிப்புக்குள்ளான தமிழ் மக்கள் சார்பாகத்தான் தமிழீழ விடுதலைப்புலிகள் இருக்கின்றார்கள். ஆகவே, விடுதலைப்புலிகள் முன்வைப்பது தமிழ் மக்களுடைய அபிலாசைகளும் தமிழ் மக்களுடைய எதிர்காலம் சம்பந்தமான விடயங்களாகும். ஆகவே, அதில் சர்வதேச சமூகம் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டிய தேவையில்லை. உரிமைகள் மறுக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களுடைய வேண்டுகோள்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதில் அர்த்தமில்லை.

அதை மறுத்து ஆக்கிரமித்து நிற்கின்றவர்கள் அல்லது அதற்குத் தீர்வை முன்வைக்க வேண்டியவர்கள் பக்கம் அழுத்தங்களைப் பிரயோகிப்பது பொருத்தமானதாக இருக்கும் என்று அவர்களுக்கு இன்று மிகத் தெளிவாக விளக்கியுள்ளோம்.

**இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தையில் தற்காலிகமாக விடுதலைப்புலிகள் விலகியுள்ள நிலையில் நோர்வேத் தரப்பு இவ்வாறான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடும் என்பது பற்றி.**

இப்பொழுதும் நோர்வே தான் அனுசரணையாளர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே அந்த வகையில் எதிர்காலத்தில் இன்று ஏற்பட்டு இருக்கின்ற இந்த முடக்க நிலை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்ற இந்தப் பேச்சுக்களை மீண்டும் முன்னேற்றகரமாகக் கொண்டு செல்வதாயின் நோர்வேத் தரப்பின் அனுசரணையும் பங்களிப்பும் மிகவும் முக்கியம். ஆகவே சாத்தியப்பாடான சூழ்நிலையை உருவாக்குவதற்கு அவர்கள் தொடர்ந்து முயன்று வருகின்றார்கள்.

அரச தரப்பில் இருந்து எமது தலைமைப்பீடம் எடுத்த யதார்த்த பூர்வமானகள நிலைகள் பற்றி-நடைமுறைச் சாத்தியமான இந்த முடிவுகளுக்கு சாத்தியப்பாடான ஒரு பொருத்தப்பாடான முடிவுகளை அரசு எடுக்கின்ற பொழுது அந்தப் பணியைத் தொடர்ந்து நோர்வே மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

**அண்மையில் ஏற்பட்ட முல்லைத்தீவுக் கடற் சம்பவம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பாகக் தங்களின் நிலைப்பாடு.**

கண்காணிப்புக் குழுவினரின் அறிக்கை எமக்கு முழுமையாக ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை. அது தொடர்பான விளக்கமான நிலைப்பாட்டை விரைவில் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு அனுப்பவுள்ளோம்.

**சமாதான முயற்சிகளில் தற்காலிகமாக விடுதலைப் புலிகள் விலகியுள்ள நிலையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்களை அச்சுறுத்தும் வகையில் தமது செயற்பாடுகளை சிறிலங்காப் படையினர் மேற்கொண்டு வருவது தொடர்பாகத் தங்களின் நிலைப்பாடு.**

இது ஒரு புதிதாக எழுந்த ஒரு சூழல் என்று தான் கருதவில்லை. இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில் இருந்து தொடர்ந்து மக்களிடையே சுதந்திரமான நடமாட்டங்கள் தடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவர்களுடைய இயல்பு நிலைகள் சீர்குலைக்கப்பட்டுக் கொண்டிருகின்றது. இது சம்பந்தமாக ஒவ்வொரு சுற்றுப் பேச்சுக்களின் போதும் நாங்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வலியுறுத்தி இருக்கின்றோம். இதனுடைய தொடர்ச்சியில் வேகம் அதிகரித்து இருக்கின்றதே தவிர, தொடர்ச்சியாக இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால், மக்கள் மத்தியிலும், எங்கள் மத்தியிலும் ஒரு வெறுப்பு ஏற்பட்டுக் கொண்டிருகின்றது. இதை நாங்கள் அவதானிக்க முடிகின்றது.

**விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமது பதவியை இராஜினாமா செய்து விட்டார் என்று வெளிவரும் ஊடகங்களின் செய்திகள் உண்மையானதா? இப்பொறுப்பை நீங்கள் ஏற்று இருக்கின்றீர்களா? அது பற்றி கூறுவீர்களா?**

இக்கருத்து பத்திரிகைகளின் ஊகம் அதாவது எங்களுடைய பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்குகின்ற பணியை எங்களுடைய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறார். இடைக்காலத்தில் அவருக்கு சுகயீனம் ஏற்பட்டதால் தமிழீழத்துக்கு வருகை தந்திருந்த அவர் அவசரமாக உடல் நிலையைக் கருத்திற்கொண்டு லண்டனுக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டதே தவிர வேறொன்றும் இல்லை. தற்போது அந்தப் பணியை மேற்கொள்ளக்கூடிய உடல் நலத்துடன் இருக்கின்றார். எமது அமைப்பைப் பொறுத்தவரையில் பதவிகள் என்று எவருக்கும் இல்லை. ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகின்ற கடமையை நிறைவேற்றுவது தான் எங்களுடைய அமைப்பினுடைய மரபு. அந்த அடிப்படையில் தொடர்ந்தும் அவர் தான் அந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றார். ஆகவே, இது ஒரு செய்தி ஊடகங்களின் ஊகம் என்று தான் நான் கருதுகின்றேன்.

**முல்லைத்தீவுச் சம்பவம் தொடர்பாக 12 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தொடர்ந்து தெரிவித்து வருகின்றீர்கள். ஆனால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கையில் இக்கூற்றை நிராகரித்து இருக்கின்றார்கள். இது சமாதான நிலையைப் பாதிக்கக்கூடிய வகையைத் தோற்றுவிக்குமா? என்ற ஐயப்பாடு எழுகின்றது.**

இந்த முல்லைத்தீவுச் சம்பவம் எமது மக்களை மிகவும் ஆத்திரம் ஊட்டுகின்ற, சினமூட்டுகின்ற ஒரு செயற்பாடாகத்தான் கருதப்படுகின்றது. எம்மாலும் அப்படியேதான் கருதப்படுகின்றது. தொடர்ந்து இப்படியான மிலேச்சுத்தனமான அத்துமீறல்கள் சமதான முன்னெடுப்புக்களை நிச்சயமாகப் பாதிக்கும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. இது சம்பந்தமாக நோர்வேத் தரப்பிற்கும், கண்காணிப்புக் குழுவிற்கும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றோம். ஆகவே. இப்படியான சூழ்நிலைகளை மாற்றியமைப்பதற்கு தகுந்த முறையில் அரசு படைத்தரப்பைச் சரியான வழியில் கட்டுப்படுத்தி வைக்காவிட்டால் எதிர்காலத்தில் இப்படியான இக்கட்டான நிலையை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்றுதான் நான் கருதுகின்றேன்.

**போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் தமிழீழ விடுதலைப் புலிகள் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக குறிப்பிட்ட அறிக்கையில் புலிகள் மீது கூடுதலாக குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாகத் தங்களின் கருத்து என்ன?**

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் இதை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை. ஏனெனில் கண்காணிப்புக்குழுவின் பிரசன்னம் இல்லாமல் விடுதலைப்புலிகளினுடைய கப்பலை சர்வதேச கடற்பரப்பில் வைத்துத் தாக்கி அழித்துவிட்டு அதனுடைய தடயங்கள் அனைத்துமே அழித்துவிட்டு விடுதலைப்புலிகள் மீது புனையப்பட்ட தடையங்களை சுட்டிக்காட்டி புலிகள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனெனில் சந்தேசகத்திற்கிடமான கப்பலாக இருந்தால் அதை பரிசோதிக்கின்ற அதிகாரம் சிறிலங்காக் கடற்படைக்கு இருந்தால் அதை யுத்த நிறுத்த உடன்படிக்கை என்ற அடிப்படையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் பிரசன்னத்தில் அல்லது அவர்களின் கண்காணிப்பின் கீழ்த்தான் அதை நடைமுறைப்படுத்தலாம். அது மிகத்தெளிவாக உடன்படிக்கையில் கூறப்பட்டு இருகின்றது. சிறிலங்கா தனது ஒருமைப்பாட்டையும், இறைமையையும் பாதுகாப்பதென்றாலும் விடுதலைப்புலிகள் மீதான வலிந்து தாக்குதலை தவிர்த்தவாறுதான் தமது கடமையைச் செய்யலாம். ஆகவே, தமிழீழ விடுதலைப் புலிகள் என்று அடையாளம் காணப்பட்ட பின்னரும் புலிகளின் கப்பல் என்று தெளிவாகப் புரிந்து கொண்ட நிலையிலும் அதைத் தாக்கி அழித்து விட்டு தவறான குற்றச்சாட்டுக்களைப் போட்டுக் கொண்டு இருப்பதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய லண்டன் விஜயத்தின் போது இடைக்கால நிர்வாக சபை தொடர்பான அறிக்கை ஒன்றை அன்ரன் பாலசிங்கத்திடம் சமர்ப்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான அறிக்கை ஏதாவது கிடைத்துள்ளதா?**

அப்படியான பரிந்துரைகள் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை.

**இடைக்கால நிர்வாக சபை தொடர்பான நெருக்கடியில் தற்பொழுது தங்களின் நிலைப் பாட்டில் ஏதாவது நெகிழ்வுத் தன்மை அன்றி இறுக்கமான கொள்கைகளைக் கொண்டு இருக்கின்றதா?**

இடைக்கால நிர்வாக நிலைப்பாட்டில் நெகிழ்வு, இறுக்கமான நிலை என்று சொல்ல முடியாது. ஏனென்று சொன்னால் அது ஒரு இடைக்கால நிர்வாகம தான். ஆகவே எங்களுடைய மக்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில் அல்லது இந்தச் சமாதானத்தினுடைய பயன்களை அனுபவிக்கக்கூடிய வகையில் நாங்கள் நிலைமைகளைச் சீர் படுத்த வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக இங்கு ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும். இது ஒரு அரசியல் தீர்வுக்கான முன் முயற்சி. இந்த முயற்சி வெற்றிகரமாக நிறைவேறுகின்ற போதுதான் எமது மக்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பப்படும். எதிர்காலத்தில் ஒரு அரசியல் தீர்வு முயற்சியில் நாங்கள் முன்னோக்கி உறுதியாகச் செல்ல முடியும்.

**சந்திரிகா அவர்கள் விடுதலைப்புலிகள் போருக்கு தயாராகி வருகின்றார்கள் என்ற செய்தியை அண்மை நாட்களாக வெளிப்படுத்தி வருகின்றார். இது தொடர்பாக.**

விடுதலைப்புலிகள் போருக்கு தயார்படுத்துவதாக சனாதிபதி அவர்கள்தான் இப்படியான எதிர்வு கூறல்களை கூறிக்கொண்டு இருக்கின்றார்கள். இதை நாங்கள் இன்று ஒரு புதுமையான நிலைப்பாடாக கருதிக்கொள்ளவில்லை. எப்பொழுதுமே சமாதான முயற்சிகள், அமைதி முயற்சிகள் முன்னேற்ற கரமாகச் செல்கின்ற பொழுது அதைஜீரணிக்கின்ற நிலையில் சனாதிபதியும் அவரைச்சார்ந்தவர்களும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை. அவர்களுடைய ஊகமா அல்லாது விட்டால் அவர்களுடைய மனக்குழப்பமா என்று எங்களுக்குத் தெரியவில்லை. எங்களைப் பொறுத்தவரையில் அமைதிவழியில் சமாதான வழியில் தீர்வை எட்டுவது என்று முனைந்து கொண்டு இருகின்றோம். அதுவேதான் எமது நிலைப்பாடாகும்.

**சமாதான வழியில் தீர்வை யெட்டுவதற்கு இடைக்கால நிர்வாக சபையைத் தருவதற்குச் சிக்கல்களை ஏற்படுத்துபவர்கள் ஒரு நிலையான தீர்வைத் தருவார்களா? இவர்களுடன் பேசிக்கொண்டிருக்கலாமா?**

இவர்களைப் பொறுத்தவரையில் சர்வதேச சமூகத்தினுடைய எதிர்பார்ப்பு இந்த நிலையில் இருக்கின்றது. அமைதி வழியில், சமாதான வழியில் பேசிய நாகரிகமான முறையில் பிரச்சினைக்குத் தீர்வுகான வேண்டும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது. இழப்புக்களும் அழிவுகளும் இல்லாமலும் அப்படியான ஒரு தீர்வுகான எட்டலாம் என்ற நம்பிக்கையோடு தான் எமது தலைமைப்பீடம் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டது தொடர்ந்தும் இவ்வாறு புறம் தள்ளப்படும் நிலையிலும் ஏமாற்றப்படுகின்ற நிலையிலும் எதிர்காலத்தில் எமது மக்களின் நலன் கருதி சர்வதேச சமூகத்தின் முன்னால் எமது நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டிய சூழல் வரும். எனினும் இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்த தவறுகின்ற அரசு நீங்கள் குறிப்பிட்டது போல எதிர்காலத்தில் எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வை கொண்டுவர ஒத்துழைக்குமா என்பது ஒரு கேள்விக்குறியே இது இன்றைய நிலைப்பாட்டில் ஏற்படப் போகின்ற திருத்தங்களும், முடிவுகளின் அடிப்படையில் எதிர் காலத்தில் தெளிவான பதிலைச் சொல்லக்கூடியதாக இருக்கும். (பா)

# இஸ்ரேல்-பலஸ்தீனத்தில் யுத்த நிறுத்தம்;
# வடக்கு காஸாவில் படைவிலகல் ஆரம்பம்!

## ஜெருசலேமில் நெருக்கடி வலுக்கிறது

**பலஸ்தீனத் தீவிரவாத அமைப்புக்கள் மூன்று மாதகால யுத்த நிறுத்தமொன்றிற்கு இணங்கியதைத் தொடர்ந்து பலஸ்தீனப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப் படையினர் விலக ஆரம்பித்துள்ளனர். வடக்கு காஸாவிலிருந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட வாகனங்களில் இஸ்ரேலியப் படையினர் வெளியேறியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.**



பலஸ்தீன பாதுகாப்பு அலுவலர் ஒருவர் (இடது) இஸ்ரேலிய பாதுகாப்பு அலுவலருடன் காஸாவில் நெற்சரீம் முகாம் நிலையொன்றில் படை விலகலுக்கு முன் உரையாடுகின்றார்.

பலஸ்தீன சனாதிபதி யஸீர் அரபாத்தின் பற்றா இயக்கம் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்களான ஹமாஸ், ஜீகாத் என்பனவே யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க இணங்கியுள்ளன. இஸ்ரேலியப் படையினர் விலக்கப்பட்டாலே தாம் யுத்த நிறுத்தத்திற்கு உடன்படுவோம் என இவை நிபந்தனை விதித்திருந்தன.

மேற்காசிய பிரச்சினைக்கு அமெரிக்கா மேற்கொண்ட அமைதித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் ஓர் அங்கமாக அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலொஸ்ஸாரைஸ் நேற்று முன்தினம் இஸ்ரேலுக்கு விஜயம் செய்து பேச்சுக்களை நடத்தியிருந்தார். இஸ்ரேலியப் படை விலகல் ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து இப்பகுதிகளின் பாதுகாப்பு கட்டுப்பாடுகள் பலஸ்தீன அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் கிழக்கு ஜெருசலேமைத் தம்வசம் வைத்திருக்க தீவிர தேசியவாத யூதர்கள் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். புராதன கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் வழிபாட்டுத்தலங்கள் அமைந்துள்ள கிழக்கு ஜெருசலேம் இரு தரப்பினருக்கும் சமய முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1968ஆம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்து ஒரு இலட்சத்து எழுபது ஆயிரம் யூதர்கள் அங்கு குடியேறியுள்ளனர். கிழக்கு ஜெருசலேம் மீது பலஸ்தீனர்கள் உரிமை கொண்டாடுவதைத் தடுக்கும் பொருட்டு தீவிர தேசியவாத யூதர்கள் அந்தப் பகுதியில் இஸ்ரேலிய தேசியவாதக் கொடியை ஏற்றி வைத்துள்ளனர். பிரதமமந்திரி ஏரியல் ஷரோனின் அமைச்சரவையில் சுற்றுலா அமைச்சராக உள்ள பெனி எலோன் தலைமையில் மேலும் பல வீடமைப்புத் திட்டங்கள் அங்கு மேற்கொள்ளப்படவுள்ளன. 250 இஸ்ரேலியக் குடும்பங்களுக்கான புதிய வீடமைப்புத் திட்டம் ஒன்று உடனடியாக அங்கு ஆரம்பிக்கப்படவுள்ளது என இஸ்ரேலிய சுற்றுலா அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## வேலை நிறுத்தம்

எரிபொருள் விலையைக் குறைக்கக்கோரி நைஜீரிய எதிர்க்கட்சிகள் நேற்று பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. சனாதிபதி எரிபொருளின் விலையை 50 வீதத்தால் அதிகரித்துள்ளார். 8ஆவது எண்ணெய் ஏற்றுமதி நாடான நைஜீரியாவில் குறைந்த விலையில் எரிபொருள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்தது.

## காஷ்மீர் விவகாரத்தில் விட்டுக்கொடுப்பு அவசியம்

### முஷாரப் வலியுறுத்து

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா சற்று விட்டுக் கொடுக்க வேண்டுமென்று பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார். அமைதியை விரும்பும் வாஜ்பாய் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண கொஞ்சம் வளைந்து கொடுக்க வேண்டும் என லாவோசில் பேட்டியளிக்கையில் கூறியுள்ளார்.

அத்துடன் திபெத் பிரச்சினையில் இந்தியாவின் சமீப நிலைப்பாட்டின் மூலம் தமக்கு இந்த நம்பிக்கை பிறந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



பலஸ்தீனப் பொலிசார் காஸா நகரில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## சீனாவில் வெள்ளப்பெருக்கு பல லட்சம் பேர் வீடிழப்பு!

(பெய்ஜிங்)

சீனாவில் பெய்து வரும் கன மழையினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை இருபதாக உயர்ந்துள்ளது. இலட்சக் கணக்கானோர் வீடுகளையிழந்துள்ளனர். கம்யூனிஸ் நாடான சீனாவில் சென்ற மாதம் முதல் கடுமையான மழை பெய்து வருகின்றது.

இந்தத் தொடர் மழையினால் முக்கிய சாலைகள், ரயில் தண்டவாளங்கள் என்பன மழை நீரினால் அரித்து அடித்துச் செல்லப்பட்டுள்ளன. தொடர் மழை காரணமாக மின், தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதால் சீன மக்களின் இயல்பு வாழ்வு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. சித்வாங், குவாங்ஸி, கோணால் மாகாணங்கள் இந்த மழையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு வசித்துவரும் நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தமது வீடுகளை இழந்துள்ளனர்.



சீனாவின் சங்காய் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட லுபு என்று பெயரிடப்பட்ட குவாங்பூ ஆற்றுக்குக் குறுக்கே கட்டப்பட்ட உருக்கினாலான உலகின் மிக நீளமான பாலம். இதன் நீளம் 550 மீற்றர்.

## அதிரடித் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த பாக்தாத்தின் வடக்கே புதிய நடவடிக்கை!

சதாமின் ஆதரவாளர்கள் நிறைந்த பாக்தாத்தின் வடக்கு பகுதிகளில் விசேட இராணுவ நடவடிக்கைகளை அமெரிக்கப் படைகள் ஆரம்பித்துள்ளன. தமக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் முயற்சி இதுவெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் பதுங் கியிருக்கும் ஆயுதம் தாங்கிய சதாம் ஹுசைனின் ஆதரவாளர் களை இல்லாதொழிக்கும் இந்த நடவடிக்கைகளுக்கு பீரங்கி பொருத்தப்பட்ட வாகனங்களும் விமானங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமெரிக்க உயர் அதிகாரி கடந்த 30 ஆண்டு காலமாக சதாமால் கட்டி அமைக்கப்பட்ட மாளிகைகள், சுரங்கங் கள் என்பனவற்றை இலகுவில் தம்மால் கண்டறிய முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அண்மைக் காலமாக அமெரிக்கப் படையினர் தாக்கப்படுகின்றனர். சில தாக்குதல்கள் பயனற்றுப் போனாலும் மற்றும் சில தாக்குதல்களில் அமெரிக்க, பிரிட்டன் படையினர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர் என்றார்.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை இத்தகைய தாக்குதல்களை முற்றாக இல்லாதொழிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



ஆஸ்திரியாவில் நடந்த ஏயார் பவர்—03 என்ற கண்காட்சி நிகழ்வில் பிரான்ஸ் விமானப் படையினர் சாகஸத்தில் ஈடுபடுகின்றனர். இந்த நிகழ்வில் 2,50,000 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

## அயோத்தி விவகாரம் தீவிரமடைகிறது
## விஸ்வஹிந்து பரிஷத் கோரிக்கை நிராகரிப்பு!

(புதுடில்லி)

ராமர் கோயில் பிரச்சினைக்காக பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி பதவி விலக மாட்டார்கள் என விஸ்வஹிந்து பரிஷத்திற்கு பா.ஜ. கட்சி பதிலளித்துள்ளது.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு சட்டம் கொண்டு வராதுவிட்டால் வாஜ்பாய், அத்வானி இருவரும் பதவி விலக வேண்டும் என்று விஸ்வ ஹிந்து பரிஷத் கூறியிருப்பதை பா. ஜ. கட்சி நிராகரித்துள்ளது.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவர துணைப் பிரதமர் அத்வானி முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் இதனை பிரதமர் வாஜ்பாய் தடுக்கக் கூடாது என்றும் விஸ்வ ஹிந்து பரிஷத் அண்மையில் கூறியிருந்தது.

இதைச் செய்யத் தவறினால் அவர்கள் இருவரும் ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் அது கூறியிருந்தது.

ஆனால், இதனை ஏற்க முடியாது என்று பா.ஜ. கட்சி பொதுச செயலாளர் பிரமோத் மகாஜன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ராஜ்பூரில் செய்தியாளரிடம் பேசிய அவர், ராமர் கோயில் கட்டும் வேலை தேசிய சனநாயகக் கூட்டணிக்கு இல்லை என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

பிரதமர் வாஜ்பாய் விரும்புவதையே துணைப் பிரதமர் அத்வானி செயற்படுத்துகின்றார் என்றும் அவர்கள் இருவருக்குமிடையில் கருத்து வேறுபாடு எதுவுமில்லை என்றும் மகாஜன் கூறியுள்ளார்.

ஆனால், அயோத்திப் பிரச்சினைக்கு சமரசம் எனும் பேச்சுக்கே இடமில்லை என மீண்டும் விஸ்வஹிந்து பரிஷத் தெளிவுபடக் கூறியுள்ளது.

## அத்தியாவசியப் பொருள் விலையுயர்வை எதிர்த்து பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் போராட்டம்

(டாக்கா)

பங்களாதேஷில் அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வைக் கண்டித்து அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் பூரண கதவடைப்புப் போராட்டம் நடத்தியுள்ளன.

தலைநகர் டாக்காவில் நடைபெற்ற பேரணியின்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காவல்துறையினர் ஏராளமானோரைக் கைது செய்தனர். இந்தியாவின் அயல் நாடான பங்களாதேஷில் 2003, 2004 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்டது ஆளும் தேசிய கட்சி தாக்கல் செய்துள்ள இந்த நிதி நிலை அறிக்கையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை பெருமளவு உயர்ந்துள்ளதுடன், மக்களைப் பாதிக்குமளவில் வரி சுமைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியான அவாமி கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் இந்த விலையுயர்வைக் கண்டித்து அரசுக்கு எதிராக நேற்று முன்தினம் பூரண கதவடைப்பிற்கும் அழைப்பு விடுத்திருந்தது.இதை ஏற்று நாட்டின் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு இருந்ததுடன் போக்குவரத்தும் முடங்கிப் போனது. தலைநகர் டாக்காவில் எதிர்க்கட்சியினர், தொழிலாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஆயிரக் கணக்கானோர் மாபெரும் பேரணியை நடத்தியதுடன் அரசிற்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

இலங்கையில் ஏற்பட்ட இனவன்முறை காரணமாக தமிழர் வாழ்நிலங்கள் பறிக்கப்பட்டதோடு தமிழர்களின் வாழ்வும் நாளாந்தம் பறிக்கப்பட்டு வந்தது. அந்த வகையில் தமிழ்ப் பெண்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் நோக்கியவாறு அதாவது, பாலியல் வல்லுறவிற்கு உட்பட்ட பெண்கள், உழைப்பாளர்களை இழந்த பெண்கள் சீதனக்கொடுமை காரணமாக வாழ்விழந்த பெண்கள் என்ற வகையில் அவர்களை உளவியல் தாக்கத்தில் இருந்து விடுவிக்கும் பொருட்டு "வெற்றிமனை"என்ற பெயரில் ஒரு இல்லத்தை நிறுவி அதன் மூலம் அவர்களைப் பராமரித்து வருகின்றோம்.இவ்வில்லத்தில் வைத்து பராமரிக்கப்பட்ட சிலர் இன்று நோய் குணமடைந்து சமுதாயத்துடன் இணைந்து வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.



கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்காக "மலர்ச் சோலை" என்ற இல்லத்தினை உருவாக்கி இங்கு வைத்து பராமரித்து வருகின்றோம். ஆண்களால் ஏமாற்றப்பட்டோ அல்லது தலைவிரித்து கோர தாண்டவம் ஆடும் சீதனப் பிரச்சினை காரணமாக குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டுப் பிரிந்து சென்ற பெண்களை இங்கு வைத்து சில வேலைத் திட்டங்களை முன்னெடுத்து சமூகத்தில் வாழ வழிவகுக்கின்றோம்.

தாய் தந்தையரை

பெண் என்று இல்லாமல் அவர்களை உள் வாங்கி முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இச்சிறுவர் இல்லத்தில் பராமரிக்கின்றோம். இங்கு எட்டு மாதக் குழந்தை உட்பட 17 வயது வரைக்குமான 93 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவற்றைவிட மலர்ச்சோலை என்ற இல்லத்தில் 35 தாய்மாரும் 41 குழந்தைகளும் உள்ளனர்.

☞☞ பெண்களுக்கான தொழில் முயற்சிகளால் தொழில் நிலையங்கள் ஏதாவது நிறுவப்பட்டுள்ளதா?

இவர்களுக்கான ஒரு தொழிற்பகுதி நிறுவப்பட்டுள்ளது. அதாவது உதய தாரகை தும்புத் தொழிற்சாலை, உதயதாரகை அப்பள உற்பத்தி நிலையம், உதய தாரகை தையல் நிலையங்கள் என்பன நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் பாதிக்கப்பட்ட பெண்களை உள்வாங்கி அவர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு மேற்படி தொழிற்கூடங்களினால் வருகின்ற வருமானங்களை அங்கு பணிபுரிகின்ற பணியாளர்களின் பெயரில் வங்கியில் வைப்பிலிடப்படுகின்றது.

தான் பயனாளிகளை உள்வாங்கி வருகின்றோம். இதைவிட மாவட்டம் மாவட்டமாகவும் பிரதேசம் பிரதேசமாகவும் ஒவ்வொரு கிராமங்களிலும் பெண்கள் அபிவிருத்திக் குழுக்கள் என்ற குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு பெண்கள் தொடர்பான வேலைத்திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

இவ்வாறு தெரிவுசெய்யப் படுபவர்கள் குழுக்களாக வீடு வீடாகச் சென்று பெண்கள் அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் தொண்டர்கள் என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர்.

இக்கிராமியத் தொண்டர்கள் அந்தந்தக் கிராமங்களில் பெண்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலைத்திரட்டி வருவதன் மூலம் அவர்களை இனங் கண்டு அவர்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடிகின்றது.

☞☞ அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தின் பிரதான நோக்கம் என்ன?

பின்தங்கிய கிராமங்களில் கல்வி அறிவு குறைந்த பெண்களுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு தொழிற்கல்வி பயிலுவதற்காக தொழிற் பயிற்சிக்கல்லூரிகளுக்குச் செல்வதற்கான அடிப்படைத் தகைமையில்லாத பெண்களுக்கு அவர்களின் தொழில் அறிவு சான்றிதழ்களை பெற்றுக் கொடுக்கும் பொருட்டும் இத்தொழிற் பயிற்சி நிலையம் இயங்கிவருகின்றது. ஆரம்பத்தில் மாவட்ட மட்டங்களில் தையற்பயிற்சி, தட்டச்சுப் பயிற்சி, சிகை அலங்காரம் போன்ற கற்கை நெறிகளை வழங்கிவந்தோம்.

# பாதிப்புற்ற பெண்களுக்கு வழிகாட்டும் பெண்கள் அபிவிருத்தி நிறுவனம்

பெண் சமூகத்தில்பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கியதோடு இதன் பாதிக்கப்பட்ட பெண்கள் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் உள்ளன. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு தமிழீழப் பெண்களுக்கு வாழ்வளிக்கும் பொருட்டு உருவாக்கப்பெற்ற பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பாளரும் மத்திய குழு செயலாளருமான திருமதி கமலா அவர்களுடனான நேர்காணல்.

☞☞ இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணம்?

1991ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சமூக சேவை மனப்பான்மை கொண்ட பெண்கள் சிலரால் யுத்தத்தின் தாக்கம் அதிகரித்து வந்தமையாலும், பெண்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருந்தமையாலும் இவற்றைக் கருத்திற் கொண்டு பெண்களின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

☞☞ இந்நிறுவனம் எவ்வாறான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டமைந்துள்ளது?

இந்நிறுவனத்தின் நிர்வாக அமைப்பானது பதினொரு பேர் கொண்ட ஒரு நிர்வாக அமைப்பாகவும் அந்த நிர்வாகத்தின் கீழ் பணியாளர்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

1991ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தை மட்டும் மையமாகக் கொண்டு அது இயங்கி வந்தது. பின்னர் 1993 ஆம் ஆண்டு வன்னியிலும் செயற்படத் தொடங்கி பின் படிப்படியாக வேறுமாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

☞☞ எவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றீர்கள்?

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அல்லது சமூகத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் நலனைக் கருத்திற் கொண்டு பெண்களுக்குரிய வேலைத் திட்டங்களையும் தொழில் வாய்ப்பையும் வழங்கி வருகின்றோம்.

சமூகத்தில் உள்ள உளவியல் பாதிப்பிற்குட்பட்ட மன நோயாளர்களை உள்வாங்கி

இழந்த சிறுவர்களை இனங்கண்டு அவர்களை உள் வாங்கி கல்விவசதி மற்றும் அடிப்படை வசதிகளுடன் வழங்கி அவர்களை சமூகத்தின் தூண்களாக வளர்க்கும் பொருட்டு "செந்தளிர் சிறுவர் இல்லமும்" பிறமாவட்டங்களில் இருந்து தமது உறவுகளைப் பிரிந்த ஆதரவற்ற இளம் பெண்களுக்காக "மேரிஇல்லமும்" மூளை வளர்ச்சி குறைந்த ஆதரவற்ற பெண்களுக்காக "நிறைமதி இல்லமும்" இயங்கிவருகின்றது.

☞☞ மேற்படி இல்லங்கள் ஆரம்பத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டதா?

ஆரம்பத்தில் இவ்வாறு தனித்தனி இல்லங்களாக ஆரம்பிக்கப்படவில்லை. 1991ஆம் ஆண்டு ஐந்து இல்லங்களையும் ஒன்றாக இணைத்து "பூரணி" என்ற பெயரில் ஆரம்பித்து இயங்கி வந்தது. போரின் தாக்கம் அதிகரித்துச் செல்ல பயனாளிகளின் தொகையும் அதிகரித்தமையால் தனித்தனி இல்லங்களாகப் பிரிந்து தற்போது இயங்கி வருகின்றன.

☞☞ சிறுவர் பராமரிப்பு இல்லம் தொடர்பாக அதாவது, எவ்வாறான சிறுவர்கள் பராமரிக்கப்படுகின்றனர்?



தாய் தந்தையரைப் பிரிந்த பிள்ளைகள் அல்லது உறவினர்களை இழந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கல்வி கற்பிக்க முடியாத குடும்பங்களில் உள்ள சிறுவர்கள், வீதியோர வியாபாரத்தில் ஈடுபடும் சிறுவர்கள் வீடுகளில் வேலைக்கமர்த்தப்படும் சிறுவர்கள் ஆண்,

ஒவ்வொரு பிரதேசத்திலும் உதயதாரகை தையல் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக மலர்ச்சோலையில் உள்ளவர் களுக்காக தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இவர்களின் போசாக்கை மேம்படுத்தும் பொருட்டு ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



முத்தையன்கட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இளம் பெண்களுக்கான மேரி இல்லத்தில் 33 பேர் இருந்தனர். தற்போது சமாதான சூழ்நிலையில் 13 பேர் திருகோணமலை, மட்டக்களப்புக்கு உறவினர்களின் முகவரி தெரிந்து அங்கு சென்றுள்ளனர்.04 பெண்களுக்கு திருமணம்செய்து வைத்திருக்கின்றோம். மீதிப்பேர் தற்போது உள்ளனர். இவர்களுக்கான உதயதாரகை கூட்டுப் பண்ணை என்ற பண்ணை ஒன்றை உருவாக்கி அங்குள்ள பெண்களினால் காலபோகமும் தற்போது சிறுபோகமும் வயல்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைவிட மேட்டுநிலப் பயிர்ச்செய்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கால் நடைகள் வளர்க்கப்படுகின்றன. இங்கு முழு வேலைத் திட்டங்களையும் பெண்களே செய்து வருகின்றனர்.

கிருமிநாசினிகளை விசிறல், உரமிடுதல், நீர்பாய்ச்சுதல்,போன்ற சகல வேலைத்திட்டங்களையும் இவர்களே மேற்கொண்டு வருகின்றனர். வேறு எவரையும் கூலிக்கு அமர்த்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

☞☞ .சகல மாவட்டங்களிலும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றதா?.

ஏற்கனவே சகல மாவட்டங்களிலும்இருந்து

தொழிற்பயிற்சி நிலையம்என்ற நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் உருவாக்க வேண்டும் என்பதற்காக இத் தொழிற்பயிற்சி நிலையம் உருவாக்கப்பட்டு இதன் மூலம் தொழில்சார் கற்கை நெறிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இதில் தையல் பயிற்சி பெற்ற 15 பயனாளிகளுக்கு தமிழீழ வைப்பகத்தின் கடன் திட்டம் மூலம் தையல் இயந்திரங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

☞☞ இந்நிறுவனத்திற்கான இந்நிதியுதவி எங்கிருந்து கிடைக்கின்றது?

நிறுவனப் பணியாளர்களின் கொடுப்பனவுகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் வழங்கப்படுகின்றது. பராமரிப்பு இல்லங்களுக்கான

**சு.பாஸ்கரன்**

செலவுகள் வெளிநாட்டில் உள்ளவர்களாலும், தமிழ் மகளிர் அமைப்புக்கள், அரச நிறுவனங்களின் நிதியுதவியுடனும் இயங்கிவருகின்றது.

இவற்றை விட எமது நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களின் வருமானம் மூலமும் செயற்பட்டு வருகின்றது.

□□□

# கல்லடி இராணுவ முகாம் விஸ்தரிப்பால் குடியிருப்புத் திட்டம் இடை நிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ள கல்லடி சிறிலங்கா இராணுவ முகாமை விஸ்தரிக்கும் நடவடிக்கையை சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருவதால் அப்பகுதியில் அமைக்கப்படவிருந்த மக்கள் குடியிருப்புத் திட்டம் ஒன்று இடை நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது 1982இல் கிராமிய அபிவிருத்தி பயிற்சி நிலைய கட்டடத்தில் இப்பயிற்சி முகாம் அமைக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்குச் சொந்தமான 19 விடுதிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கலால் திணைக்களம் என்பவற்றிற்குச் சொந்தமான விடுதிகள் மற்றும் கல்லடி மெரினா கடற்கரை என்பன விஸ்தரிக் கப்பட்ட பாதுகாப்பு வேலிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பகுதியில் மக்கள் நெரிசலாக வாழ்வதால் புதிய குடியிருப்பை அமைக்க கல்லடி தெரிவு செய்யப்பட்டு வீடமைப்புத் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன. 1982ஆம் ஆண்டு இவ்விடத்தில் படை முகாம் அமைந்த காரணத்தால் இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

அத்துடன் மட்டக்களப்பு நகரில் உள்ள நகரசபை கட்டடம், இந்து இளைஞர் மன்றக்கட்டடம், அரச விடுதிகள் என்பவற்றிலும் அரச படைகள் நிலை கொண்டுள்ளனர். இது தொடர்பாக அப்பகுதி பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் படை முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் சிறிலங்காப் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# த.வி.கூ.மத்தியகுழு கூடுகிறது; தலைமைத்துவத்திலும் மாற்றம்?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழுக்கூட்டம் எதிர்வரும் ஆறாம் திகதி கட்சியின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் வி.ஆனந்தசங்கரியை அப்பதவியில் இருந்து நீக்குமாறு கோரும் பிரேரணை சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் இக் கூட்டத்தில் தலைமை பதவியில் மாற்றம் கொண்டுவரும் பிரேரணை ஏதும் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறவில்லை என்று கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

"இத்தகைய பிரேரணை ஒன்றை இக்கூட்டத்தில் கொண்டுவர முடியும். இவ்விடயம் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று கூட்டணியின் எம்.பி ஒருவர் கூறியுள்ளார்.கட்சியின் மத்திய குழுவில் 36 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இதில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தால் மட்டுமே தலைமைப் பதவியை மாற்றியமைக்க முடியும் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


# கைகலப்பு

உடையார்கட்டு - மூங்கிலாறு மகேஸ் குடியிருப்பில் இரு குடும்பத்தவரிடையே கைகலப்பு இடம்பெற்றதில் பெண் ஒருவர் காயமடைந்தார். குடியிருப்பு வாசியான பெண்ணொருவரை அயல்வீட்டைச் சேர்ந்த ஆண், பெண் உள்ளிட்ட ஐவர் கடுமையாகத் தாக்கினர்.சம்பவதினம் குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட வாய்த்தகராறு குறிப்பிட்ட பெண்ணைத் தாக்குமளவிற்கு இட்டுச் சென்று அவர் காயத்திற்குள்ளாகினார். மேலதிக விசாரணை நடவடிக்கைகளில் காவல் பணிமனையினர் ஈடுபட்டுள்ளனர்.(19)

# கணினியின் உதவியுடன் வரைகலை

அறிவியல் உலகில்

கணினியின் முக்கிய பயன்பாடுகளில் ஒன்றாக கணினி வரைகலை (**Computer Graphics**) உள்ளது. கணினி மூலம் படங்களை வரைதல் என்பது 1963இல் இவான் சுதர்லாண்ட்




என்பவரால் முதன் முதலில் உருவாக்கப்பட்டது. இவரது ஸ்கெட்ச் பாட் (**Sketch Pad**) என்னும் பயன் பாட்டுப் பொதியின் மூலம் பொறியியலாளர்கள் விசேட கணினித்திரை லைற்பென், விசைப் பலகை என்பவற்றை உபயோகித்துத் தேவையான வரைபடங்களை வரைந்தனர். இதன் பின்னர் இவ்வரை கலைத்துறையானது வேகமான வளர்ச்சியைக் கண்டது.

கணினியின் உதவியுடன் வரைதல் (**Computer Aided design or Drafhing-CAD**) எனும் இத்துறை 1960இன் நடுப் பகுதியில் ஐ.பி.எம்., டி.எவ்.சி-1 கணினிகள் மூலம் மோட்டார் வண்டிகளை வடிவமைக்கப்பயன்படுத்தப்பட்டது.

தனி நபர் கணினிகள் குறிப்பாக, ஐ.பி.எம். கணினிகள் 1981இல் அறிமுகப்படுத்தப்பட்ட பின் கட்டடக் கலைஞர்களுக்கான கணினி வரைகலை பயன்பாட்டுப் பொதிகள் பயன்பாட்டில் வந்தன. 1982இல் ஓட்டோ டெஸ்க் எனும் நிறுவனம் முதலாவது "காட்" பொதியை ஓட்டோ காட் (**Auto CAD**) எனும் பெயருடன் ஐ.பி.எம். தனிநபர் கணினியில் பயன்படுத்தத் தக்க வகையில் வெளியிட்டது. பின்னர் மிகவும் தாக்கம் விளைவிக்கத் தக்க வகையில் "காட்" இன் பயன் பாடு அதிகரித்துச் சென்றது.

கணினியின் உதவியுடனான வரைதல் (**CAD**) என்பது பொறிமுறை வரைதலுக்கு (**Geometrical Drawing**) உதவுகின்றது. இது சாதாரணமாக வரைபடத் தாளில் வரைதல் உபகரணங்களின் உதவியுடன் வரையப்பட்டு வருவது அனைவருக்கும் தெரிந்த விடயமே.

ஆனால் இன்று அதற்கு உள்ள தேவையின் அதிகரிப்பும் கணினியின் வளர்ச்சியும் அதனையும் கணினியின் உதவியுடனான ஒரு செயற்பாடாக மாற்றியுள்ளது.

இவ்வகையில் முன்னர் குறிப்பிட்ட ஓட்டோ டெஸ்க் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட **Auto CAD** எனும் மென்பொருள் விருத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இம்மென் பொருளில் டொஸ் பதிப்பு, விண்டோஸ் பதிப்பு என இரு வகையாக இருந்தது. இப்போது டொஸ் பதிப்பு கைவிடப்பட்டு விண்டோஸ் பதிப்பு விருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இப்போது **Auto CAD** 2000 என்றும் மென்பொருள் பெரும்பாலும் பாவனையில் உள்ளது.

ஓட்டோ காட்டைப் பொறுத்தவரை பயன்படுத்தப்படும் துறைகளுக்கு ஏற்ப பிரத்தியேகமான மென்பொருட்களும் உள்ளன. அதாவது நில அளவை, கட்டடக் கலை, பொறியியல் துறையில் குடிசார், இயந்திரவியல், மின்னியல் மற்றும் படம் வரைஞர் போன்ற துறைகளுக்கு ஏற்ப **CAD Survey, Archi CAD, Civil Design, Map CAD, Electronil Work bench** என பல்வேறு மென் பொருட்கள் உள்ளன. எனினும் இவற்றின் அடிப்படையாக **Auto CAD** எனும் மென்பொருளே உள்ளது. இதன் மூலம் வரைகலையில் துல்லியம். விரைவு, இலகு, சிக்கனம் போன்ற பயன்பாடுகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இதன் மூலம்

மிகவும் திருத்தமான, துல்லியமான வரை படங்களை இலகுவாக வரையக் கூடியதாக இருக்கும். அத்துடன் மாற்றங்கள் எதுவும் செய்ய வேண்டுமாயின் அவற்றை இலகுவாகச் செய்து கொள்ளலாம்.

மிகத்துல்லியமான அளவீடுகளில் வரைபடங்களை வரைந்து கொள்ள முடிவதுடன் விரும்பிய அளவிடைகளில் (**Scale**) அவற்றை அச்சுப்பதித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டளைகளின் உதவியுடன் சிக்கலான பொறிமுறை வடிவமைப்புகளையும் பெற்றுக் கொள்ளலாம். பல்வேறுபட்ட கோணங்களில் தேவையான வரைபடங்களை சுலப மாக வரையக் கூடிய வகையில் பல சிறப்புக்கட்டளை களை **Auto CAD** கொண்டுள்ளது.

ஒன்றின் மீது ஒன்று பல்வேறு அடுக்குகளில் (**Layers**) படங்களை வரைய வேண்டி யிருப்பின் அதனைச் சுலபமாகச் செய்யக் கூடிய வகையில் இம்மென் பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முப்பரிமாணத் தோற்றங்கள் எறியங்கள் இயற்கை வடிவங்கள் என்பவற்றை இலகுவாக வடிவமைக்கலாம்.


இம்மென் பொருளானது வழமையாக மனிதன் எடுக்கும் நேரத்தை விட குறைந்தளவு நேரத்தில் வரைபடங்களை வரைய உதவுவதால் இதற்கான செலவீடு குறைக்கப்படுகிறது. பொறியியலாளர்கள் போன்றோரின் நேரம் மிச்சமாகிறது.

**Auto CAD** என்னும் மென்பொருள் வீடுகள், பாரிய கட்டடங்கள், தொழிற்சாலைக் கட்டடங்கள் என்பவற்றை வரைந்து அவற்றினுள் வைக்கக் கூடிய பொருட்கள், இயந்திர சாதனங்கள் என்பவற்றை வைக்க வேண்டிய இடங்கள் என்பவற்றை முன் கூட்டியே திட்டமிட கட்டடத்தின் தோற்றம் எவ்வாறு அமையும் என்பது முதல் மின் விளக்குகளை எங்கு பொருத்தினால் வசதியாக இருக்கும் நீர்க்குழாய்களை எங்கு அமைப்பது என்பது வரையான விடயங்களை முன்கூட்டியே திட்டமிட உதவும். குறிப்பாக அடுக்கு மாடிக் கட்டங்கள் அமைக்கும் போது படிகள், உயர்த்திகள் (**Lift**) மின் விநியோகம், நீர் விநியோகம், சுகாதார வசதிகள், கழிவகற்றல் என்பனவற்றை திட்டமிட உதவுவதுடன் முன்கூட்டியே கட்ட டத்தின் தோற் றத்தை அறிந்து கொள்ள வும் உதவும்.

இதேபோல் பொறியியல் துறையில் இயந்திர சாதனங்களை வடிவமைக்கவும் அவை இயங்கும் போது ஏற்படக் கூடிய சிக்கல்களை முன்கூட்டியே உய்த்தறியவும் உதவக் கூடியதாகும்.

**சி. சிவபாலன்**

# இணையத் தளங்களை வடிவமைத்தல்




இன்ராநெற், இன்ரநெற் வலையமைப்புகளின் தகவல் பரிமாற்ற ஊடகமாக இணையத் தளங்கள் (**Websites**) விளங்குகின்றன. இவை நிலைகொள்ளும் இருப்பிடங்கள் இணையத் தள உலாவிகள் (**Web browsers**) ஆகும். இவற்றிலிருந்து தயாரிக்கப்படும் ஆவணம் இணையத் தளப் பக்கம் (**Web Page**) ஆகும். இணையத் தளம் என்பது பல இணையத் தளப் பக்கங்களைக் கொண்டதாகும்.

குறித்ததொரு இணையத் தள ஆவணத்தைத் தயாரிப்பதற்கு சொற் தொகுப்பு பொதி (**Word Processing Pakage**) உடன் அனிமேசன் பக்கேஜஸ் அறிவு இருந்தால் போதும் மைக் கிறோ சொவ்ற் புரொன்ற் பேஜ், லோட்டர் பாஸ்ற் சூட் (**Lotus Fast suits**) ஆகிய மென் பொருட்களைப் பாவித்து எளிதாகத் தயாரிக்க முடியும்.


சொற்கள் அல்லது படங்கள் பலவற்றை இணைத்து (ஒன்றைப் பலகோணங்களில்) காட்சியொன்றைத் தொகுப்பது அதாவது இயங்கு நிலைப்படத் தொகுப்பு என்பது அனிமே சன் (**Animation**) எனப்படும். இதனை (**Microsoft Giftanimator, Ulead Gift animator**) ஆகிய மென் பொருட்களைப் பாவித்து தயாரிக்க முடியும். ஆனால் வெப்மொழிகள் இவற்றுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாகச் சிறந்து விளங்குகின்றன. எச்.ரி.எம். எல், வி.ஆர்.எம்.எல், எக்ஸ்.எம்.எல்., யு.எம்.எல். எனப் பல வெப்மொழிகளை உதாரணமாகக் கூறலாம்.

ஜாவா ஸ்கிறிப்ற் (**Java Script**) வி.பி. ஸ்கிறிப்ற் (**VB Script**) எனும் ஜாவா விசுவல் பேசிக் மொழிகளின் கட்டளை வரிகளை எச்.ரி.எம்.எல். மொழியுடன் இணைத்துப் பாவிப்பதை டி.எச்.ரி.எம்.எல். மொழியெனவும் அழைக்கின்றனர்.

### இணையம், மின் அஞ்சல் உலாவிகள் (Internet, E-mail Brow sers)

இணையத் தளங்கள், இலத்திரனியல் அஞ்சல் தளங்கள் ஆகியவற்றைத் தனித் தனியே விரித்துப்பார்க்க பல உலாவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இன்ரநெற் எக்ஸ் புளோரர் (**Internet Explorer**) நெற்ஸ்கப் நவிகேற்றர் (**netstape navigater**) என்பன இணைய விரிக்கைகளாகவும் அவுட்லுக் (**Out look**) இயூடுரோ கோல்ட் (**Eudora gold**) இயூடுரோ புரோ (**Eudora pro**) என்பன மின் அஞ்சல் உலாவிகள் ஆகவும் விளங்குகின்றன.

இணையத் தள மொழிகளால் தயாரிக்கப்பட்டவைகளை மட்டுமன்றி அனைத்து இணையத் தளங்களை எச்.ரி.எம்.எல். கட்டளை வரிகளாக (**Html code**) இணைய உலாவிகள் மாற்றித்தரும் இதன் மூலம் தயாரிக்கப்பட்ட இணையத்




தளங்களிலேயே திருத்தங்கள், மாற்றங்கள் செய்ய முடியும். எச்.ரி.எம்.எல். போன்ற இணையத் தள மொழிகளைப் பாவித்து இணையத் தளங்களைத் தயாரிப்பதாயின் வேட்பாட், வேட்பாட் ரெக்ஸ் டொக்கியூமென்ற் நோட்டோன் எடிற்றர் (**NE**) பேர்சன் எடிற்றர் (**PE**), டொஸ் எடிற்றர் (**Dos Editor**) ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைப் பாவிக்க வேண்டியிருக்கும். ஆயினும் இவ் மொழிகளுக்கான விசேட எடிற்றர்கள் வெளிவந்துள்ளன.

**ஆர். கே. ஜீவலிங்கம்**

## மட்டக்களப்பில் மிதிவெடி அகற்றும் பணி ஆகஸ்ட் மாதம் முதல் ஆரம்பமாகும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் பணிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியினை சுவீடன் அரசு வழங்கியுள்ளது என தமிழர்புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் திட்டம் மூன்று படிமுறைகளாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

மிதிவெடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், மிதிவெடி உள்ள இடங்களை இனங்காணல், அந்த மிதிவெடிகளை அகற்றுதல் ஆகிய படிமுறையிலேயே இப்பணிகள் இடம்பெறவுள்ளன.

## சிறிலங்காப் படையினருக்கு மனித உரிமை குறித்து விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மனித உரிமைகள் மீறும் செயற்பாட்டில் அதிகமாக ஈடுபட்டுவரும் சிறிலங்காப் படைத்தரப்பினருக்கு மனித உரிமைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு தினங்களாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு இந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கடற்படையிருக்கான கருத்தரங்கு கடந்த சனியன்று காரைநகர் கடற்படைத்தளத்திலும், இராணுவத்தினருக்கான கருத்தரங்கு நேற்று முன்தினம் பலாலி இராணுவத் தளத்திலும் இடம் பெற்றது. (33)

## - பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து -

# வைத்தியசாலை சிற்றூழியர் சங்கங்கள் இன்று முதல் தொடர் வேலை நிறுத்தம்!

(கொழும்பு)

**சிறிலங்கா வைத்தியசாலை தொழிற்சங்கங்களை சேர்ந்த சிற்றூழியர்கள் இன்று முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். ஐந்து தொழிற்சங்கங்கள் இணைந்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றன.**

இவ்வேலை நிறுத்தம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படும் என்று சிறிலங்கா சுகாதார சேவைகள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. சிற்றூழியர்களின் வேலை நிறுத்தம் கால வரையறை அற்றது எனவும் தெரிவிக்கப்படுவதுடன் சுகாதார அமைச்சின் அலுவலகத்தின் முன்பாக புதன்கிழமை முதல் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது எனவும் மேற்படி சுகாதார சேவைகள் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

மேற்படி வேலை நிறுத்தப் போராட்டம் ஆறு கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொள்ளப்படுகிறது. தாதி உதவியாளர் பயிற்சியை உடனடியாக ஆரம்பித்தல், 5000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குதல், சீருடைக்கான மானியமாக 7000 ரூபா வழங்குவதுடன் வருடாந்த படியை 1000 ரூபாவாக அதிகரிப்பது என்பனவும் இக் கோரிக்கைகளுள் அடங்குகின்றன.

தற்போது வைத்தியசாலைகளில் கடமைபுரியும் சமயா சமய ஊழியர்களை நிரந்தரமாக்குவதும் வைத்தியசாலையின் சுகாதார சேவைகள் தனியார் மயப்படுத்துவது இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார அமைச்சர் பி. தயாரட்ணவுக்கு தொழிற்சங்கம் மேற்படி விடயங்கள் தொடர்பான கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளதுடன் இது தொடர்பாக நேரடியாக அமைச்சருடன் பேசுவதற்கான வாய்ப்பை சங்கம் கேட்டிருக்கிறது.

## விபத்தில் பெண் ஒருவர் பலி

மட்டக்களப்பு தன்னாமுனைப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இப் பெண்ணின் இரு பிள்ளைகளும் வான் சாரதியும் இவ் விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

## - இராணுவ வலயத்துள் செல்லும் -

# கால்நடைகளை மீட்கமுடியாது உரிமையாளர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருக்கும் இராணுவ பாதுகாப்பு வலயங்களில் இருக்கும் பொதுமக்களின் கால்நடைகளை மீட்கமுடியாது உரிமையாளர்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

பொதுமக்களின் இந்தக் கால்நடைகள் கட்டாக்காலிகளாக இவ் வலயங்களில் அலைந்து திரிகின்றன. இப்பகுதி குடிசனம் இல்லாது புல்லும் செடிகொடிகளும் மண்டிப்போய் இருப்பதால் இப் பகுதிக்குள் மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் மீளத் திரும்புவதில்லை.

பலாலி, தெல்லிப்பளை, மண்டைதீவு போன்ற இடங்களில் உள்ள பாதுகாப்பு வலயப் பகுதிகளிலேயே பெருமளவு கால்நடைகள் இவ்வாறு தங்கி உள்ளன. (33)

# டோக்கியோ நிதியைப் பயன்படுத்தி செப்ரெம்பர் முதல் அபிவிருத்தி

## - சிறிலங்கா நிதியமைச்சர் சொக்ஸி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கிடைக்கப்பெற்ற நிதி உதவியினைக் கொண்டு செப்ரெம்பர் மாதம் முதல் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் எண்ணியிருப்பதாக சிறிலங்காவின் நிதி அமைச்சர் கே. என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை அரசாங்கம் தயாரித்து வருகின்றது.

இந்தத் திட்டங்களை அமுல்படுத்தத் தனியான அலுவலகம் ஒன்று திறக்கப்படவுள்ளது.

செப்ரெம்பர் மாதம் முதல் பகுதியில் தென்பகுதியை அபி விருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகளுடன் பேசி வட-கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள்

முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இதில் போட்டிகள் நடந்து முடிந்த சில முன்பள்ளிகளின் விபரம் வருமாறு:-

கடந்த 27ஆம் திகதி வட்டக்கச்சி பாரதி, கஸ்ரோ முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வு வண. பிதா அகஸ்ரின் அவர்களின் ஆசியுரையுடன் நடைபெற்றது.

மாந்தை கிழக்கு முன்பள்ளிகளின் திறனாய்வு விளையாட்டு விழா கடந்த 28ஆம் திகதி சமூக மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வட்டக்கச்சி புதுக்காடு மிதுரன் முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த 23ஆம் திகதியும், மற்றும் வட்டக்கச்சி கீறோ முன்பள்ளி அறிவுச் செல்வன் முன்பள்ளி என்பவற்றின் விளையாட்டு விழாக்களும் அண்மையில் இடம்பெற்றன.

மேலும், பேராறு கிராம மாலதி முன்பள்ளி, கற்சிலைமடு கிராம பண்டாரவன்னியன் முன்பள்ளி ஆகியன இணைந்து அண்மையில் விளையாட்டு விழாவை நடத்தின. (12,05)

## வீரமுரசு நிகழ்வு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மந்துவில் அரசரத்தினம் அ.த.க. பாடசாலையில் மந்துவில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சூசைமுத்து தலைமையில் வீரமுரசு வார அரங்கு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சமகால அரசியல் கருத்துரையை புதுக்குடியிருப்புக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொருளாளர் வேதவனம் முல்லை. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (19)

## முன்பள்ளி அமைக்க கோரிக்கை

அரசபுரத்தில் முன்பள்ளி ஒன்றை அமைத்துத் தருமாறு கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அப்பகுதியிலுள்ள 20க்கும் மேற்பட்ட சிறார்களின் நன்மை கருதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வி.க. இராசதுரை இக்கோரிக்கையை விடுத்துள்ளார். (34)


## கணினிப் பயிற்சிநெறி ஆரம்பம்

**கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ள கணினி தொழில்நுட்ப பயிற்சி நெறியினை பயில விரும்பும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

பின்வரும் தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம்:-

(01) க.பொ.த(சாதாரணதரம்) பரீட்சையில் ஆங்கில மொழி அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி

அல்லது

(02) க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சித்தி

எதிர்வரும் 20.07.2003க்கு முன்னராக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை

அதிபர்,
தொழில் நுட்பக் கல்லூரி,
கிளிநொச்சி.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அதிபர்,
தொழில் நுட்பக் கல்லூரி,
கிளிநொச்சி.

(சி-8193)



## பதவி வெற்றிடம்

**கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் பின்வரும் பணிநிலைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**1.கணக்குப் பதிவாளர்:-**
*கல்வித்தகைமை :- க.பொ.த(உ/த) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்ததுடன் துறைசார்ந்த அனுபவம்*

**2.காவலாளி:-**
*கல்வித்தகைமை :- 8ம் தரச் சித்தி*

**மேற்படி பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 10.07.2003ற்கு முன் அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

அதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி,
கிளிநொச்சி.

(சி-8193)



# நலிவுற்றோர் நலன் வாழ்வுத் திட்டம்

# கொடிவாரம் 01.07.2003 = 21.07.2003 வரை

S.D.C

# "நலிவுற்றோருக்கு உதவுவோம்"

போரினால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் நலிவுற்றோர் பலர். இவர்கள் இன்று அரவணைப்பார் யாருமின்றி முதிய விதவைகளாகவும், தனித்தும், தபுதாரர்களாகவும், நோயாளர்களாகவும், ஊனமுற்றோர்களாகவும், மனநோயாளர்களாகவும் துன்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் வாழ்வை வளமாக்க எல்லோரும் ஒருங்கிணைந்து உதவுவோம்.

"சமுதாய வளர்ச்சியே எமது மகிழ்ச்சி"

சமுதாய முன்னேற்ற நிலையம்,
தலைமைச் செயலகம்,
கிளிநொச்சி.

(சி-8192)

## சிந்தனைக்கு

விடுதலை வீரனின் சுயநலமற்ற பதற்றமற்ற- வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமானது, சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக, அவன் தனது உயிரையும், அர்ப்பணிக்கத் துணிகிறான்.

**தமிழீழத் தேசியத்தலைவர்**



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 01-07-2003

## தேவையற்ற விதத்தில்

யாழ்.இல் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி அஸ்கிரிய பீடாதிபதியின் யாழ். விஜயம் ரத்துச் செய்யப்பட்டது. அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனாவின் பயணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டு அவர் அவசர அவசரமாக கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளார். ஏன் இந்தக் கெடுபிடி? யாழ். இல் பாதுகாப்பு நிலவரத்திற்குத் திடீரென ஏற்பட்ட பாதிப்புத்தான் என்ன?

அஸ்கிரிய பீடாதிபதியின் யாழ். விஜயமோ, அன்றி அமைச்சர் ஜெயலத்தின் யாழ். சுற்றுப் பயணமோ தமிழ் மக்களுக்கு எத்தகைய பயனைக் கொண்டுவரப் போவதில்லை என்பது தமிழ் மக்கள் அனைவருக்கும் தெரிந்ததொன்றே. மாறாக, இவ் இருதரப்பினதும் பயணங்களில் நிகழ்ச்சித் திட்டத்தில் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறான - மக்களின் உணர்ச்சிகளைச் சீண்டிப் பார்க்கின்ற விடயங்களே அடங்கியிருந்தன.

குறிப்பாக, இருவரினதும் விஜயங்களின் நோக்கத்தில் பிரதானமான நயினாதீவு நாக விகாரைக்குப் பக்கத்தில் பெரியளவிலான புத்தரின் சிலை ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுதல் முக்கிய இடம்பெற்ற விடயமாகும். ஆகையினால், இவர்களின் விஜயங்கள் தமிழ்மக்களின் மனங்களை நோகடிக்கும், மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காதவையாகவே இருக்கும் என்பதில் சந்தேகப்பட எதுவுமே இல்லை.

ஆகையினால், இவர்களின் பயணங்கள் தமிழ் மக்களினால் வரவேற்கத்தக்கதொன்றாகவோ, அவர்களுக்கு நன்மை பயற்பதாகவோ இருப்பதற்கில்லை. ஆனால், பயணத்தின் விளைவுகள் எதுவாக இருந்தாலும், பாதுகாப்பு நிலவரங்களைக் காரணம் காட்டி அவற்றை ஒத்திவைக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதே கேள்வியாகும். இது படைத்தரப்பினரின் அழுத்தத்தினால் மேற்கொள்ளப்பட்டதா? அன்றி ரணில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையா?

ஏனெனில், யாழ்.இல் திடீரென பாதுகாப்பு நிலவரத்தில் எந்தவொரு மாற்றமும்-அதாவது நிலைமை மோசமடைந்ததற்கான நிகழ்வுகள் எவையும் நடைபெற்றதாக இல்லை. அதாவது, பொலிசார் மீதோ அன்றி ஆயுதப் படையைச் சேர்ந்த எவர் மீதும் தாக்குதலோ, வன்முறையோ மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. அதே போன்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து வரும் சிங்கள மக்களுக்கோ அன்றி வியாபாரிகளுக்கோ எந்தவித அச்சுறுத்தலோ அன்றிப் பாதிப்போ ஏற்பட்டதாகவும் இல்லை. குற்றச் செயல்கள் அதிகரித்த போக்கில் காணப்பட்டாலும் சிறிலங்கா அரசின் நலனுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவையாக இல்லை.

அது மாத்திரமல்ல, வரலாறு காணாத வகையில் அமைந்த தமிழ் மக்கள் எழுச்சி கொண்டெழுந்த பொங்குதமிழ் நிகழ்வு கூட அமைதியாகவே நடந்து முடிந்துள்ளது. மக்கள் உணர்ச்சி மேலிட்டால் வன்முறையிலோ அன்றி அழிவுச் செயற்பாடுகளிலோ ஈடுபட்டதாக இல்லை. மக்கள் கட்டுப் பாட்டையும், ஒழுக்கத்தையும் கடைப்பிடித்திருந்தனர். அது மாத்திரமல்லாது விடுதலைப்புலிப் போராளிகள் இன்னமும்-நிராயுதபாணிகளாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியற் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நிலைமை இவ்வாறானதாக இருக்கையில், யாழ்.இல் பாதுகாப்பு இல்லை எனக் கூறி ஆயுதப் படைத்தரப்போ/அரசாங்கமோ மகாநாயக்கரின் விஜயத்தை ரத்துச் செய்யவும், அமைச்சரின் விஜயத்தை இடைநிறுத்தவும் முனைந்தது ஏன்? யாழ்.இல் பாதுகாப்பு அற்ற நிலவரமும், பதற்றமான சூழ்நிலையும் நிலவுவதானதொரு காட்சியைச் சித்தரிக்க முயன்றதேன்?

கொழும்பில் தேவையற்ற விதத்தில் தற்பொழுதொரு பதற்ற நிலை சிறிலங்கா அரசால் தோற்றிவிக்கப்பட்டுள்ளது. இப் பதற்ற நிலை தோற்றிவிக்கப்பட்டமைக்கு ஆட்சியாளர்கள் கூறுவது போன்று புலிகளின் ஊடுருவல் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதைவிட ஆட்சியாளர்களிடையே காணப்படும் முரண்பாடு காரணமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே அதுவாகும். அதாவது, சனாதிபதிக்கும் - பாதுகாப்பு அமைச்சிற்கும் இடையிலான இழுபறியும், சந்திரிகாவிடமுள்ள நிறை வேற்று அதிகாரமும் இக்கெடுபிடிக்குக் காரணமாகும்.

இதைத் தொடர்ந்து யாழ். பயணத்திலும் பதற்றத்தைத் தோற்றிவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டதாகவே மேற் கூறப்பட்ட பயணங்களின் ரத்துக்கள் வெளிப்படுத்துவனவாகவுள்ளன. இப்பதற்றத்தை அதிகரிக்கும் நடவடிக்கையானது சமாதான வழியில் இருந்து சிறிலங்கா அர்சாங்கம் விலகிச் செல்வதாகவே அர்த்தம் கொள்ளவைக்கத்தக்கதாகும்.

இப் பதற்றத்தை அதிகரிக்கும் நடவடிக்கைக்கு யார் பின்னணியில் உள்ளனர்? அதாவது படைத்தரப்பிலுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆதரவு சக்திகளா? பாதுகாப்பு அமைச்சும் இதில் சம்பந்தப்படுவதினால், ரணில் அரசாங்கத்தின் தீர்மானமா? என்பவை முக்கியமான விடயங்களாகும். ஏனெனில், இத்தகைய பதற்றத்தை உருவாக்கும் நடவடிக்கையானது மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதித்து சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவித்துவிடும். இதனை ரணில் அரசாங்கம் விரும்பிச் செய்கின்றதோ அன்றி விரும்பாமல் செய்கின்றதோ, தெரிந்து செய்கின்றதோ அன்றித் தெரியாமல் செய்கின்றதோ, எதுவாக இருப்பினும், அது ரணில் அரசாங்கத்திற்கும் அனுகூலமாக இருக்கமாட்டாது. சமாதானத்திற்கும் சாதகமானதாக இருக்கமாட்டாது.

# சனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து பாராளுமன்றிற்கு பெற்றுக் கொள்ள வியூகம்!

## அரசு நடவடிக்கை எடுக்கிறது

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களைக் கவனிப்பதற்கு என அரசாங்கம் புதிதாக தேசிய பந்தோபஸ்த்து சபையொன்றை நிறுவியிருப்பதாகத் தெரியவருகின்றது.

உயர் பாதுகாப்பு கட்டுப்பாட்டுச் சட்ட மசோதா ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றுவதன் மூலம் இந்த தேசிய பந்தோபஸத்து சபை நிறுவப்படவிருக்கின்றது. இந்த பந்தோபஸ்த்து சபையின் தலைவராக சனாதிபதியே இருந்து வருவார். ஏனைய உறுப்பினர்களாக பிரதமர், பாதுகாப்புஅமைச்சர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வேறு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அமைச்சர்கள் பணிபுரிவார்கள்.

தேசிய பாதுகாப்புக் கருதி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சர், செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரைக் கொண்ட பாதுகாப்புச் சபைக்கு அவ்வப்போது ஆலோசனை வழங்குவதே இந்தத் தேசிய பந்தோபஸ்த்து சபையின் முக்கிய நோக்கமாக இருக்குமென்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தேசிய பந்தோபஸ்த்து சபைக்கு என்று தனியான செயலாளர் ஒருவரும் நியமிக்கப்படுவார்.

அரசியலமைப்பின் கீழ் சனாதிபதியே முப்படைகளின் பிரதம தளபதியாக இருந்து வருகின்றார். பாதுகாப்பு சபையின் கூட்டங்களுக்கு தலைமைதாங்கி நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளைக் கேட்டு அறிந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூறுகின்றார்.

அரசாங்கம் கொண்டு வரவிருக்கும் புதிய உயர் பாதுகாப்பு கட்டுப்பாட்டு சட்டத்தின் மூலம் சனாதிபதியிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்களில் பல புதிதாக நிறுவப்பட்டிருக்கும் தேசிய பந்தோபஸ்த்து கவுன்சிலிடமே கையளிக்கப்படவிருக்கின்றது.

இதன் மூலம் தேசிய பாதுகாப்பு தொடர்பான சில அதிகாரங்கள் பாராளுமன்றத்தில் வழங்கப்படவிருகின்றன. புதிய சட்டத்தின் மூலம் சனாதிபதியின் அதிகாரங்கள் சிலவற்றை மட்டுப்படுத்த எடுக்கும் அரசாங்கத்தின் இந்த முயற்சி எதிர்க்கட்சி அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தப் போகின்றது என்று அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள்.

## கண்காணிப்புக்குழுவின் சிபாரிசு குறித்து

# பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கடற்படைத் தளபதியுடன் பேசுவார்

(கொழும்பு)

சிறிலங்காப் படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பர்ணான்டோ கடற்படைத்தளபதி தயாசந்தகிரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற சிபாரிசுகள் குறித்து இவர்கள் இருவரும் பேச்சுக்கள் நடத்தவுள்ளனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை கடந்த சனிக்கிழமை தமக்குக் கிடைத்துள்ளதாகவும், இதனைப் படைத்துறை அமைச்சரிடம் தான் சமர்ப்பித்திருப்பதாகவும் படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அஸ்கிரிய பௌத்த பீடம் வலியுறுத்து

(கொழும்பு)

சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை முக்கிய பௌத்த பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடம் ஆசிர்வதித்து அங்கீகரித்துள்ளது.

அஸ்கிரிய பீட மகாநாயகர்கள் சங்கைக்குரிய சிறீ புத்தரகித்ததேரர் தனது செய்தியை நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.அங்கு பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கருத்தரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தனது உடல் நலம் காரணமாக தன்னால் பங்கேற்க முடியாமல் போனதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக நிறுவகத்தால் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

இத்தகைய விழிப்புணர்வு செயற்பாடின் மூலம் மக்களின் குரலை வெளிக்கொணர முடியும் என இந்த நிறுவகம் நம்புகிறது.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட சங்கைக்குரிய மிக காயந்துரே ஞானரட்ண தேரர் தனது கருத்தில் அனைத்து மக்களும் சமாதான முயற்சிகளுக்கான தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்ததோடு இத்தகைய கருத்தரங்குகள் தென்னிலங்கையிலும் நடத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

# மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரை வென்றது

சிறிலங்கா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் சென்லூசியாவில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டத்தின் போது மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கட்டுக்களால் வெற்றி ஈட்டியுள்ளது.

இதன்படி 2 போட்டிகளைக் கொண்ட தொடரில் 1 - 0 என்ற வகையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெற்றுள்ளது.

வேகப்பந்து வீசாளர்களுக்கு சாதகமாக அமைந்த இந்த ஆடுகளத்தில் சிறிலங்கா அணி திறமையாக விளையாடிய போதும் இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியே வெற்றியீட்டியுள்ளது. மூன்றாவது நாளன்று சிறிலங்கா அணி தனது இரண்டாவது இனிங்ஸுக்காக அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மகேல ஜெயவர்த்தன 32 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக கொலிமோர் 57 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

வெற்றியிலக்கான 212 ஓட்டங்களை பெறும் முகமாக பதிலுக்கு துடுப்பெடுத்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இரண்டாவது இனிங்ஸில் மூன்று விக்கட்டுக்களை இழந்து வெற்றிபெற்றது. அணியின் பிறைன் லாறா, சர்வான் ஆகியோரின் துடுப்பாட்டம் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றிக்கு வழி வகுத்தது.

இதில் சர்வான் 82 ஓட்டங்களையும் பிறைன் லாறா ஆட்டம் இழக்காது 80 ஓட்டங்களையும் பெற்றனர்.



சிறிலங்கா அணி முதலாவது இனிங்ஸில் 208 ஓட்டங்களையும் மேற்கிந்தியத் தீவுகள் அணி 191 ஓட்டங்களையும் பெற்றிருந்தமை தெரிந்ததே.




# நடுவரைத் திட்டிய வீரருக்கு அபராதம்

நடுவரைத் திட்டியதற்காக பிரிட்டன் டென்னிஸ் வீரர் கிரெக் ருசெடஸ்கிக்கு இரண்டே கால் லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

விம்பிள்டன் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீரர் அன்ரிரோரிக்கும் ருசெட்ஸ்கியும் கடந்த புதன்கிழமை விளையாடிய போது.

மூன்றாவது செட்டில் 5-2 எனும் ரீதியில் ருசெட்ஸ்கி முன்னிலையில் இருந்த போது அன்டிரோடி அடித்த பந்து கோட்டின் எல்லையில் விழுந்தது. பார்வையாளர்களில் ஒருவர் அவுட் எனக் கத்த, கிரெக்ருசெட்ஸ்கி பந்தை எடுக்கவில்லை.

எனினும் பந்து அவுட் இல்லை என நடுவர் தீர்மானித்துள்ளமையினால், கோபமடைந்த கிசெட்ஸ்கி நடுவரை மிக மோசமாகத் திட்டியுள்ளார்.

இதனால் இவருக்கு 2 1/4 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# பொங்கு தமிழில் ரணிலின் ஊடகச் செயலர் கலந்துகொண்டமைக்கு ஜே.வி.பி. கண்டனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வு தனி அரசு ஒன்று அமைப்பதற்கான அழைப்பாக இருந்தது. இதில் பிரதமருடைய ஊடகச் செயலாளர் பிரதமருடைய பிரதி நிதியாகக் கலந்து கொண்டுள்ளார் என்று ஜே.வி.பி.யினர் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பி மேலும் தெரிவிக்கையில்; இப்பொங்கு தமிழ் நிகழ்வு தமிழீழத் தேசியக் கொடி யேற்றத்துடன் தொடங்கப்பட்டது. இது தமிழின இருப்புக்கான ஒரு கண்காட்சி என்றும் ஒரு நிமிட மௌன அஞ்சலி நிகழ்வானது மரணமான விடுதலைப்புலிகளின் நினைவாக மேற்கொள்ளப்பட்டது என்றும் இந்த நிகழ்வில் தமிழீழம் என்ற ஒரு தனி அரசை அமைப்பதற்காகவே எல்லா மக்களாலும் சத்தியப் பிரமாணம் எடுக்கப்பட்டது என்றும் விமர்சித்துள்ளது.

"சிறிலங்கா இராணுவமே யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே போ" என்று பொங்கு தமிழ்கோசமிடல் ஒரு பகட்டான நிகழ்வாக இருந்தது என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

# பல்கலை. மாணவர் அழைப்பின் பேரில் 'பொங்குதமிழில்' கலந்து கொண்டேன்!

## பிரதமரின் ஊடகச் செயலாளர்

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த பொங்கு தமிழ் நிகழ்வுகளில் அவர்களின் அழைப்பின் பேரிலேயே கலந்து கொண்டதாகப் பிரதமரின் ஊடகச் செயலாளர் சமன் அத்தாவுடகெட்டி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் இவர் கலந்து கொண்டது தொடர்பாக ஊடகங்களில் வெளியான தகவல்கள் தொடர்பாக எடுத்துக்கூறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறே, மக்கள் விடுதலை முன்னணியின் புரட்சிக் கீதங்களை இரசிப்பதற்கு எழுபது காலப்பகுதியிலும் அண்மையிலும் பல்கலைக்கழக மாணவர்களின் அழைப்பின் பேரில் கலந்து கொண்டேன்.

பொங்குதமிழ் என்பதன் கருத்து தமிழர்களின் கருத்துக்களைச் சுதந்திரமாகவும், இரசனைக்கு ஏற்ற விதத்திலும் பாற்குடம் ஒன்றில் பால் பொங்க வைப்பதைப் போன்று அதனை வெளிக்காட்டுவதாக இருந்தது.

ஆயுதங்களுக்குப் பதிலாக சங்கீத உபகரணங்களை கையில் எடுத்து வடபகுதி மாணவர்கள் தமது கருத்துக்களை ஒரு இசை நிகழ்ச்சியினூடாக வெளிக்காட்டினார்கள்.

இவ்வாறு சனநாயக ரீதியாக பொதுமக்களை விழிப்பது வரவேற்கத்தக்கது. அது ஊக்குவிக்கத்தக்க விடயம்.

இந்த நிகழ்வுகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சிங்கள மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதனை ஏற்பாடு செய்த அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவிக்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அமைச்சர் மகேஸ்வரன் யாழ். வீட்டுக்குப் பாதுகாப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள இந்து கலாச்சார அமைச்சர் மகேஸ்வரனின் வீட்டுக்குப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாதத்தில் சில காலங்கள் மட்டுமே தங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் இந்த வீட்டைச் சுற்றி பல இராணுவத்தினர் இரவிலும் பகலிலும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுவருகின்றனர் அப்பகுதியிலுள்ள வீதிகளில் வாகனங்களை நிறுத்தக்கூட இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. (33)

## சமாதானப் பேரணி இடைநிறுத்தம்!

(வவுனியா)

வவுனியாவில் இன்று நடைபெறவிருந்த மூவின சமாதானப் பேரணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேரணி வேறு ஒரு தினத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வவுனியா சமாதானக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளனர்.

பிரமாண்டமான ஏற்பாட்டில் இப்பேரணியை இன்று நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (28)

## - கிளி.புனித செ்ன்திரேசா கல்லூரி -

# இரு மாடிக்கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வு நேற்று பகல் 12 மணியளவில் கல்லூரியின் அதிபர் திருமதி.அரியரத்தினம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்கள் ஏற்றி வைத்ததோடு புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் நாட்டி வைத்தார். மேற்படி கட்டடத்திற்கான நிதியுதவியாக 38 இலட்சம் ரூபா நிதியை நிக்கோட் நிறுவனம் வழங்கியுள்ளது. இரண்டு மாடிகளைக் கொண்ட 120X25 அடி பரப்புக் கொண்ட மேற்படி கட்டடத்தினை திருமலையைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் பொறுப்பெடுத்துடன் இதனை ஒன்பது மாதங்களுக்குள் கட்டி முடித்துக் கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வில் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், நிக்கோட் நிறுவன உதவிப் பணிப்பாளர் பார்த்திபன் மற்றும் நிர்வாக சேவையினர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (பா)

## கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

வவுனியாவில் கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் மாமடுவ வவுனியாவைச் சேர்ந்த பியதாஸ( வயது 48) என்பவரே இடது காலில் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

# புகையிரதக் கட்டண அதிகரிப்பை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## அமைச்சரவைக்கு சனாதிபதி பணிப்பு

புகையிரத சேவைக் கட்டணத்தை அதிகரிப்புச்செய்யும் யோசனையை உடனடியாக மீள் பரிசீலனை செய்யுமாறு சிறிலங்கா சனாதிபதி அமைச்சரவைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இக்கட்டண அதிகரிப்பை கைவிட்டு புகையிரத சேவையை முழுமையாக மறுசீரமைத்து அபிவிருத்தி செய்வதற்கான ஐந்து வருட செயற்திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக சனாதிபதியின் நிலைப்பாட்டை அவரது செயலகம் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

புகையிரதக் கட்டணம் நாற்பது [illegible]த்தில் இருந்து அறுபது வீதமாக [illegible] பொருட்களின் கட்டணம் இருபது வீதத்தாலும் அதிகரிக்கப்படவிருப்பதாகப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட -

# சிறுவர்களின் மறுவாழ்விற்கு யுனிசெவ் நிதியுதவி

வடக்குக் கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த யுனிசெவ் அமைப்பு 14 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திற் போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு மறுவாழ்வளிக்கும் திட்டம் தொடர்பாக யுனிசெவ் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி றெட் செய்வான் மட்டக்களப்புக்குச் சென்று அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

# கரும்புலிகள் நினைவாக விசுவமடுவில் சிரமதானம்

(விசுவமடு)

கரும்புலிகள் நினைவாக விசுவமடுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மக்களால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. விசுவமடு மேற்கு தேசிய எழுச்சிப் பேரவையினரும், மக்களும் இணைந்து விசுவமடு நகர்ப் பகுதியில் இச் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (14)

# தாண்டிக்குளத்தில் மீட்கப்பட்ட 100 கி.கண்ணிவெடி மாயமறைவு

## சந்தேகத்தின் பேரில் இளைஞர் கைது

வவுனியா தாண்டிக்குளம் காட்டுப்பகுதியில் இருந்து மீட்கப்பட்ட நூறு கிலோ எடை கொண்ட அதி சத்தி வாய்ந்த பாரிய குண்டு திருட்டுப் போய் விட்டதாக வவுனியா பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தக் குண்டைச் செயலிழக்கச் செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்ட நிலையிலேயே வவுனியா பொலிஸ் தலைமையகம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதியில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டைச் சேர்ந்த நிபுணர்கள் தாண்டிக்குளம் காட்டுப்பகுதியில் இக்குண்டை மீட்டனர்.

இக்குண்டு திருட்டுப் போனமை தொடர்பான விசாரணைகள் இடம் பெறுகின்றன.

இச்சம்பவம் தொடர்பாக தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் இருவரை சந்தேகத்தின் பேரில் பொலிசார் தேடி வருகின்றனர்.

இதேவேளை, இக்குண்டு வெடிக்கவைக்கப்பட்டுள்ளதாக முன்னர் அரசாங்கத் தரப்பு செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உடத்தலவின்ன படுகொலை சாட்சிகளுக்கு மிரட்டல்

## - சுவரொட்டிகள் மூலம் விடுக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை தொடர்பாக சாட்சியமளிக்க வேண்டாம் என சாட்சியாளர்களுக்கு மரண அச்சுறுத்தல், சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

பல்லேதலவின்ன பகுதிபூராகவும் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதன் காரணமாக அப்பகுதி மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர். இந்த சுவரொட்டிகளை அகற்றுவோர் கொலை செய்யப்படுவார்கள் என்ற வாசகங்களும் அதில் பொறிக்கப்பட்டுள்ளன.

இச் சுவரொட்டிகளில் கைக்குண்டுகளும் மனித எலும்புக்கூடுகளும் வரையப்பட்டுள்ளன.

இப்படுகொலைகளில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, அவரது இரு புதல்வர்கள் உட்பட 15 பேர் மீது விசாரணைகள் நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே.

# விசுவமடுப் பிரதேசத்தில் வீரமுரசு வார அரங்கு நிகழ்வு

விசுவமடுப் பிரதேசத்தில் வீரமுரசு வார அரங்கு நிகழ்வு நேற்று முன்தினம் விசுவமடு அதிசய விநாயகர் ஆலய முன் அரங்கில் நடைபெற்றது.

இரவு 7.30 மணிக்கு விசுவமடு வர்த்தக சங்கத் தலைவர் ஞானம் தலைமையில் அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வின் கருத்துரையினை விசுவமடு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செழியன் வழங்கினார் இதனை அடுத்து புதுவை அன்பனின் "கரை தேடும் ஓடங்கள்" நாடக நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (14)

## - தேவாலய திருவிழாவில் மோதல்-

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

வெளிசறைப்பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஒருவர் உயிரிழந்தும், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றின் போது இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற வாக்குவாதம் பின்னர் மோதலாக மாறிக் குறிப்பிட்ட துப்பாக்கிச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகக்கூறப் படுகிறது. சம்பவத்தில் அங்கு கடமையில் இருந்த பல பொலிசாரும் காயமடைந்தனர்.

## இடைக்கால நிர்வா...

டமைப்பை உருவாக்க நாம் முனைப்புடன் செயற்பட வேண்டும். பெரும்பான்மையான இந்துத்துவக் கட்சிகளைக் கொண்ட இந்திய அரசு பெரும்பான்மையான இந்துக்களைக் கொண்ட இலங்கைத் தமிழர்கள் மீது விரோதப் போக்கைக்கடைப்பிடித்து வருகிறது. பொங்கு தமிழ் போன்ற எழுச்சி நிகழ்வு மூலம் மக்கள் வெளியிட்ட உணர்வுகளுக்கும் தமது தேவைகளுக்கும் ஏற்ப கூட்டமைப்பை நேர்மையான முறையில் செயற்பட வேண்டும்.

அத்துடன் சனாதிபதியின் கவனத்தையும் சமாதானத்தின் பால் ஈர்க்க வேண்டும்.

தென்னிலங்கைக் கட்சிகள் எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான் அவை தமிழரில் கரிசனை கொண்டு எதையும் செய்வதில்லை.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு நாம் கோரும் இடைக்கால நிர்வாகத்தைப் பெறுவதற்கான கூட்டமைப்புக் கட்சிகள் தூரநோக்கு சனத்துடன் செயற்பட வேண்டும் என அவர் கூறினார்.

கடந்த வாரம் புலிகளுக்கு எதிரான தமிழ்க் கட்சிகளைச் செயற்பட வைக்கவென இந்தியத் தூதவர்களால் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் தமிழர் கூட்டணியினர் கலந்து கொண்டமை பற்றியும் அதிர்ச்சி தெரிவித்தார்.

இப்படியான அரசியல் நெருக்கடிகளால் மீண்டும் ஒரு யுத்தம் வெடித்தால் தாம் மானமுள்ள தமிழர் என்ற ரீதியில் போராடுவோம் என்றார். (33)

## ஜப்பானியத்...

மத்திய மைதானத்தை வந்தடைந்த இவர்களை விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் அவர்கள் சமாதான செயலகத்துக்கு அழைத்துச்சென்றார். (பா)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.